DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, ERODE

**CALENDAR CASE NO.91/2018**

Cross Examination of Witness

12.08.2021

**அசா.3** - உமாராணி

**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு 1 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

இவ்வழக்கின் 1 வது எதிரி ரிஷிகேஷ் குண்டு என்பவரை எனக்கு இவ்வழக்கு சம்பந்தமாக எப்போதுமே தெரியாது என்றால், சரிதான்.

**4, 6, 7, 8, 9, 11, 12, 18, 19, 22, 23, 24, 26 முதல் 30 வரையிலான எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களால் வழங்கப்பட்ட செயல்முறை ஆணை அ.சா.ஆ.3 யின்படி சம்பவத்தன்று எனக்கு பணி ஒதுக்கப்படவில்லை என்றால், சரிதான். எனக்கு செயல்முறை ஆணை எதுவும் தனியாகக் கிடையாது. என்னுடைய உடன் உயர் அதிகாரி அரூர் வருவாய் வட்டாட்சியர் ஆவார். சம்பவத்தன்று நான் தேர்வு சம்பந்தமாக பணியமர்த்தப்பட்டதற்கு எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால், சரிதான். நான் அங்கு இருக்க வேண்டியது என்னுடைய பணியாகும். அதற்கு தனியாக செயல்முறைகள் தேவையில்லை. செயல்முறைகள் இல்லாமல் நான் சம்பவத்தன்று பணியில் இருந்தேன் என்பது உண்மைக்குப் புறம்பானது என்றால், சரியல்ல. அ.சா.2 கருப்புசாமியின் நடமாடும் கண்காணிப்புக் குழுவில் நான் உறுப்பினர் அல்ல என்றால், சரிதான். 12.08.2012 ம் தேதி மாவட்ட வருவாய் அலுவலரால் எனக்கு ஒதுக்கப்பட்ட தேர்வு மையங்கள் எத்தனை என்றால், எதுவும் ஒதுக்கப்படவில்லை, என்னுடைய அதிகார வரம்பில் நடக்கும் தேர்வு மையத்திற்கு நான் பொறுப்பாவேன். என்னுடைய அதிகார வரம்பில் நடக்கும் தேர்வு மையத்திற்கு நான் பொறுப்பு என்று எந்த ஆணையும் தனியாக இல்லை என்றால், சரிதான். என்னுடைய பிர்காவுக்கு உட்பட்ட எத்தனை தேர்வு மையங்களுக்கு சென்று பார்த்தேன் என்றால், ஒரு தேர்வு

மையத்திற்குத்தான் சென்று பார்த்தேன். சம்பவத்தன்று எனக்கு ஒதுக்கப்பட்ட பணிகள் மற்றும் அதிகாரம் என்னவென்றால், வழக்கமாக இருக்கும் பணிகள் தான், அதனுடன் சேர்த்து நான் தேர்வுப் பணிகளையும் மேற்கொள்ள வேண்டும். தேர்வுப் பணிகளை மேற்கொள்வதற்கு அதிகாரம் கொடுக்கப்பட்ட நபர்கள்தான் தேர்வு நடைபெறும் இடங்களுக்குள் செல்ல முடியும் என்றால், சரியல்ல. சம்பவத்தன்று தேர்வு மையத்திற்குள் நான் நுழைவதற்கு தனியாக அதிகாரமோ, பணிகளோ ஒதுக்கப்படவில்லை என்றால், அவ்வாறு ஒதுக்கப்பட வேண்டிய அவசியம் இல்லை. தேர்வு நடக்கும் மையம், தேர்வு நடக்கும் சமயத்தில் தடை செய்யப்பட்ட பகுதி என்றால், சரிதான். அ.சா.2 கருப்புசாமி தேர்வு மையத்தைப் பொறுத்த வரை எனக்கு உடன் உயர் அதிகாரி அல்ல என்றால், சரிதான். TNPSC யால் நடத்தப்படும் தேர்வு முழுமையாக வீடியோ பதிவு செய்யப்படும் என்றால், அது பற்றி எனக்குத் தெரியாது. எனக்கென்று வருவாய் துறையின் நிலை ஆணைகள் உண்டு என்றால், சரிதான். வருவாய் நிலை ஆணைகளின் படி நான் தினசரி பணிகள் குறித்து நாட்குறிப்பு பராமரிக்க வேண்டும் என்றால், சரிதான். சம்பவத்தன்று என்னால் பராமரிக்கப்பட்ட நாட்குறிப்பை காவல் துறையினர் என்னிடம் கேட்டார்களா, நான் காவல் துறையினரிடம் ஒப்படைத்தேனா என்றால், அது குறித்து எனக்கு ஞாபகம் இல்லை. காவல் துறையின் விசாரணையின்போது என்னிடம் காவல் துறையினர் நாட்குறிப்பை கேட்டதாகவும், நான் ஒப்படைத்ததாகவும் சொல்லவில்லை. என் பணியைப் பொறுத்து நாட்குறிப்பு என்பது ஒரு முக்கியமான ஆவணம் என்றால், சரிதான். 12.08.2012 அன்று தேர்வு மையத்தில் எத்தனை தேர்வுகள் நடைபெற்றது என்றால், ஒரு தேர்வு தான் நடைபெற்றது. என்னுடைய பிர்காவிற்கு உட்பட்ட பள்ளியில் ஒரு தேர்வுதான் நடைபெற்றதா அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தேர்வு நடைபெற்றதா என்பது குறித்து காவல் துறை விசாரணையில் என்னிடம் எதுவும் சொல்லவில்லை என்றால், சரிதான். தேர்வு நேரம் காலை 10 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு 1 மணிக்கு முடிக்கப்பட்டதாக ஞாபகம். சம்பவத்தன்று தேர்வு மையத்திற்கு காலை 9.30 மணிக்கு வந்தேன். கம்பையநல்லூர் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி என்பது அடுக்குமாடி கட்டிடம் என்றால், சரிதான். சம்பவத்தன்று தேர்வு மையத்தில், எத்தனை தேர்வு அறைகள் தேர்வு எழுத அனுமதிக்கப்பட்டது என்றால், ஞாபகம் இல்லை. தேர்வு ஆரம்பிப்பதற்கு முன்பாக தேர்வு எழுதும் அறைகள் எத்தனை என்பதை நான் பார்வையிடவில்லை என்றால், சரியல்ல.

எத்தனை தேர்வு அறைகள் இருந்தது, யார் யாரை தேர்வறைக்கு பணியில் அமர்த்தியிருந்திருந்தார்கள் போன்ற விவரங்கள் எனக்குத் தெரியாது என்றால், சரிதான். யாரைத் தேர்வறைப் பணிக்கு அமர்த்தியிருந்தார்களோ, அவர்களை எனக்கும், எனக்கு அவர்களையும் தனிப்பட்ட முறையில் தெரியாது என்றால், சரிதான். நான் பணியின் போது அடையாள அட்டை அணிந்திருந்தேன். என்னுடைய அடையாள அட்டையைப் பயன்படுத்தி தேர்வு மையத்திற்குள் நுழையலாம் என்று எவ்வித உத்தரவும் கிடையாது என்றால், சரிதான். எனக்கு தனியாக உத்தரவு எதுவும் தேவையில்லை. சம்பவத்தன்று எந்தெந்த தேர்வு அறையில், யார் யார பணியிலிருந்தார்கள், எத்தனை பேர் தேர்வு எழுதினார்கள் போன்ற விவரங்கள் தெரியாத நிலையில், அடையாள அட்டை மட்டுமே பயன்படுத்தி தேர்வு மையத்திற்குள் நுழைவதற்கு எனக்கு அதிகாரம் இல்லை என்றால், சரியல்ல. சம்பவத்தன்று கம்பையநல்லூரில் எத்தனை பள்ளிகளில் தேர்வு நடந்தது என்று எனக்கு ஞாபகம் இல்லை. காவல் துறையினர் என்னை விசாரித்தபோது எத்தனை தேர்வு மையத்திற்கு நான் சென்று பார்வையிடலாம் என்று சொல்லியுள்ளேனா என்றால், சொல்லவில்லை. சம்பவ தினத்தன்று கம்பையநல்லூர் பெண்கள் அரசு மேல்நிலைப்பள்ளியில் தேர்வு நடந்தது குறித்து எனக்கு ஞாபகம் இல்லை. மேற்படி பெண்கள் மேல் நிலைப்பள்ளிக்கு எத்தனை மணிக்கு நான் சென்றேன் என்பதற்கு ஆவணம் எதுவும் போலீசார் கேட்கவில்லை. நடமாடும் கண்காணிப்பு குழுவில் இருந்தவர்கள் யார் யார் என்று எனக்குத் தெரியாது. TNPSC தேர்வை நடத்தும் தேர்வாணையம் ஒரு தன்னாட்சி பெற்ற அமைப்பு என்றால், சரிதான். அந்த அமைப்பிற்கு என்று தனியாக Chief Controller of Examination என்ற இடத்தில் ஒரு நபர் இருப்பார் என்றால், அதுபற்றி எனக்குத் தெரியாது. அந்த Chief Controller of Examination ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தன்னுடைய அதிகாரத்தை மாவட்ட ஆட்சியருக்கு கொடுத்திருப்பார் என்றால், அது பற்றி எனக்குத் தெரியாது. நடமாடும் கண்காணிப்புக்குழு மற்றும் அறைக்கண்காணிப்பாளர்கள் மற்றும் தேர்வு மையத்தின் கண்காணிப்பாளர்கள், தேர்வுப்பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள வருவாய்த்துறை அதிகாரிகள் ஆகியோருக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலமாக ஸ்பெசல் ஐ.டி கார்டு வழங்கப்படும் என்றால், அது பற்றி எனக்குத் தெரிந்துகொள்ளக்கூடிய சந்தர்ப்பம் இல்லை. நான் தேர்விற்காக பணி நியமனம் செய்யப்பட்டேன் என்பதற்கு தனியாக ஐ.டி கார்டு

எதுவும் கொடுக்கப்படவில்லை. அவ்வாறு ஐ.டி இல்லாத நிலையில் தேர்வு மையம் மற்றும் தேர்வு அறைக்குள் அந்த பள்ளியில் பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் வருவாய்த்துறை பணியாளர்கள் உட்பட யாரும் செல்ல முடியாது என்றால், அதனை நான் பார்க்கவேண்டிய அவசியம் இல்லை. பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் எத்தனை மணிக்கு, யார்யாரைச் சந்தித்தேன் என்று காவல்துறை விசாரணையில் சொல்லவில்லை. சம்பவத்தன்று நான் பெண்கள் மேல்நிலைப்பள்ளிக்கு செல்லாததற்கு குறிப்பிட்ட காரணம் எதுவும் இல்லை என்றால், அன்றைய தினம் பெண்கள் மேல்நிலைப்பள்ளிக்கு சென்றேன். போலீசார் விசாரித்தபோதோ, ஈரோடு நீதித்துறை நடுவர் எண்.3 ல் விசாரித்தபோதோ நான் பெண்கள் மேல்நிலைப்பள்ளிக்கு சென்றதாக சொல்லவில்லை என்றால், என்னிடம் கேட்காததால் நான் சொல்லவில்லை. சம்பவத்தன்று நான் ஆண்கள் மற்றும் பெண்கள் மேல்நிலைப்பள்ளிகளுக்கு செல்லாததால்தான் மேற்படி விவரங்களை நான் போலீசாரிடம் சொல்லவில்லை என்றால், சரியல்ல. கம்பையநல்லூரில் உள்ள ஆண்கள் மேல்நிலைப்பள்ளிக்கு தேர்விற்கு தாமதமாக வந்த சுரேஷ்குமாரை நானோ, வருவாய்த்துறை அதிகாரிகளோ அழைத்துச் சென்று அறைஎண்.32 ல் உட்கார வைத்ததாக போலீசாரிடம் சொல்லவில்லை என்றால், சரிதான். தேர்வு அறைக்கு சென்று என்னை கருப்புசாமி வினாத்தாள்களை ஒப்பீடு செய்வதற்கு எழுத்து மூலமாக உத்தரவு எதுவும் கொடுக்கவில்லை. தேர்வு அறைக்கு சென்று நான் ஒப்பீடு செய்வதற்காக வினாத்தாளை அறைக் கண்காணிப்பாளரிடமிருந்து பெறவில்லை. அந்த தேர்வு அறைக்குள் 15 நிமிடங்கள் இருந்தேன். அந்த 15 நிமிடங்கள் நான் தேர்வு அறைக்குள் இருந்ததற்கு வீடியோ பதிவு எதுவும் செய்யப்பட்டதா என்றால், நாங்கள் எதுவும் பதிவு செய்யவில்லை. 12.08.2012 ம் தேதி கம்பையநல்லூர் காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தபோது, அந்த தேர்வு அறையிலிருந்து யாரிடம் அந்த வினாத்தாள் பெறப்பட்டு ஒப்பீடு செய்யப்பட்டது என்ற விவரம் சொல்லப்படவில்லை என்றால், சரிதான். சிபிசிஐடி போலீசார் 09.10.2012 ம் தேதி என்னை விசாரித்தபோது, யாரிடமிருந்து அந்த வினாத்தாள் பெறப்பட்டு ஒப்பீடு செய்யப்பட்டது என்ற விவரம் சொல்லவில்லை என்றால், சரிதான். சிபிசிஐடி போலீசார் விசாரணையில் நான் 32 ம் தேர்வு அறைக்குள் சென்று ஒரு நபரின் வினாத்தாளைப் பெற்று ஒப்பீடு செய்து பார்த்தபோது அதிலிருந்த வினாக்களும், சுரேஷ்குமார் கொடுத்துச் சென்ற பேப்பரிலிருந்த வினாக்களும் ஒரே மாதிரியாக இருந்தது என்று சொல்லியிருந்தேன்

என்றால், சரிதான். பொதுவாக தேர்வு அறைக்குள், தேர்வு சம்பந்தப்பட்ட வினாவிடைத்தாள்களை எடுத்துச் செல்லுவது குற்றம் என்றால், சரிதான். நான் வெளியிலிருந்து வினாவிடைத்தாள்களை தேர்வு அறைக்குள் எடுத்துச் சென்றது குற்றம் என்று எனக்குப்படவில்லை. அது என்னுடைய பணி என்பதால் எனக்குக் குற்றமாக தோன்றவில்லை. மேலும் என்னுடைய உயர் அதிகாரி சொன்னதின் பேரில் எடுத்துச் சென்று ஒப்பீடு செய்தேன். அரசு விதிகளின் படி வாய்மொழியாக சொல்லப்படும் உத்தரவுகள் பின்னிட்டு எழுத்து வடிவில் வழங்கப்படவேண்டும் என்றால், எழுத்து மூலமாக உத்தரவு கொடுக்க வேண்டும் என்று இந்த விசயத்தில் எந்த அவசியமும் இல்லை. ஒப்பீடு செய்வதற்காக Chief Controller of Examination அவர்களோ, மாவட்ட நிர்வாகமோ எனக்கு அதிகாரம் எதுவும் வழங்கவில்லை. ஒரு நபரின் தேர்வு எழுதிக் கொண்டிருக்கும்போது, அதைப் பார்த்து அந்த குறிப்பிட்ட பக்கத்தில் எத்தனை வினாக்கள் இருந்தது என்று குறிப்பிட்டுச் சொல்ல முடியாது என்றால், சரியல்ல. வினாத்தாள்கள் எத்தனை பக்கங்கள் இருந்தது என்று தற்போது எனக்கு ஞாபகம் இல்லை. எத்தனை பக்கங்கள் என்னால் சரிபார்க்கப்பட்டது என்று போலீசார் விசாரணையிலோ, சிபிசிஐடி விசாரணையிலோ நான் சொல்லியுள்ளேனா என்றால், குறிப்பிட்டு நான் பக்கங்களை சொல்லவில்லை. தேர்வாணையத்தால் வழங்கப்பட்ட வினாத்தாளை ஒப்பீடு செய்து பார்த்த போது நான் கைகளால் தொடவில்லை என்றால், சரியல்ல. நான் கைகளால் தொட்டுப் பார்த்துதான் ஒப்பீடு செய்தேன். அவ்வாறு யாரிடமிருந்து நான் வாங்கி ஒப்பீடு செய்தேன் என்றால், தேர்வு எழுதிக்கொண்டிருந்த ஒரு நபரிடம் அவர் ஒரு வினாவிற்கான விடையை யோசித்துக் கொண்டிருக்கும்போது அவருக்கும் இடையூறு இல்லாமல் மேசையின் மீது வினாத்தாள் இருக்கும்போதே நான் திருப்பிப் பார்த்து ஒப்பீடு செய்தேன். விடையை அந்த நபர் அவருடைய விடைத்தாளில் எழுதிக் கொண்டிருந்தார். TNPSC தேர்விற்கான விடையை அந்த வினாத்தாளிலேயே குறிப்பிட வேண்டும் என்றால், சரியல்ல. வினாவிடைத்தாளை தேர்வு எழுதும் ஒரு நபரிடமிருந்து பெற்று ஒப்பீடு செய்வது அவரது தேர்வு நேரத்தை வீணடிப்பது என்பது எனக்குத் தெரியுமா என்றால், நான் அவருக்கு இடையூறு இல்லாமல்தான் அவரது வினாத்தாளை ஒப்பீடு செய்தேன். அவருடைய வினாத்தாளை நான் கையால் எடுத்துக் கொள்ளவில்லை, மேசையில் இருக்கும்போதே அதைத் திருப்பிப் பார்த்து ஒப்பீடு செய்தேன். அவ்வாறு ஒரு தேர்வரின்

வினாத்தாளை வாங்கி ஒப்பீடு செய்வதற்கு அறைக் கண்காணிப்பாளரிடம் ஒப்புதல் பெற வேண்டும் என்றால், தகவல் கொடுத்துவிட்டு நான் ஒப்பீடு செய்தேன். தகவல் கொடுத்த நிலையில் தேர்வில் பங்குபெற்ற நபர்களுக்கு கொடுத்த வினாத்தாளைத் தவிர கண்காணிப்பாளரின் கையில் வேறு வினாத்தாள் இருந்ததா என்றால், நான் அதை கவனிக்கவில்லை. அறைக் கண்காணிப்பாளர் ஒப்பீடு செய்யவதற்கு எனக்கு எழுத்துப் பூர்வமாக அனுமதி தரவில்லை என்றால் சரிதான். TNPSC Examination வினாத்தாள்கள் A, B, C, D என நான்கு வகைப்படும் என்றால், நான் அதைக் கவனிக்கவில்லை. வினாவிடைத்தாளை எந்த தேர்வரிடமிருந்து எந்த வகை வினாத்தாளை ஒப்பீடு செய்து பார்த்தேன் என்பதை போலீசார், சிபிசிஐடி மற்றும் நீதிமன்ற விசாரணை ஆகியவற்றில் சொல்லவில்லை என்றால், சரிதான். 12.08.2012 அன்று கம்பையநல்லூர் காவல் ஆய்வாளரிடம் கொடுத்த வாக்குமூலத்தில் திரு.கருப்பசாமி அவர்கள் என்னிடம் கையால் எழுதப்பட்டு ஜெராக்ஸ் எடுக்கப்பட்ட வினாத்தாளைக் கொடுத்து தேர்வு அறைக்கு சென்று ஒப்பீடு செய்து வரச்சொன்னார் என்ற விவரத்தை சொல்லவில்லை. திரு.கருப்பசாமி அவர்கள் என்னிடம் கையால் எழுதப்பட்டு ஜெராக்ஸ் எடுக்கப்பட்ட வினாத்தாளைக் கொடுத்து தேர்வு அறைக்கு சென்று ஒப்பீடு செய்து வரச்சொன்னபோது எத்தனை மணி என்றால், சுமார் 10.30 மணியிருக்கும். சா.பொ.4 ல் எத்தனை பக்கங்கள் மற்றும் எத்தனை வினாக்கள் இருக்கும் என்றால், 59 பக்கங்கள் மற்றும் 200 வினாக்கள் ஆகும். கருப்புசாமி அவர்களிடம், சுரேஷ்குமார் அவர் கையிலிருந்த வினாவிடை அடங்கிய ஜெராக்ஸ் பேப்பர்களை கொடுத்தபோது எத்தனை மணியிருக்கும் என்றால், காலை 10.10 மணியிருக்கும். ஈரோடு, நீதித்துறை நடுவர் எண்.3 நீதிமன்றத்தில் 09.07.2018 அன்று இதே வழக்கு குறித்து சாட்சிமளித்துள்ளேன். அந்த சாட்சியத்தில் சம்பவ நாளன்று நடந்த போட்டித்தேர்வு எந்த Topic கொடுத்து நடைபெற்றது என்றால், குறிப்பாக எந்த Topic என்று சொல்ல முடியாது என்று சாட்சிமளித்துள்ளேன் என்றால், சரிதான். அதேபோல் அதே சாட்சியத்தில் சுரேஷ்குமாரை முதன்முதலில் நானும், கருப்புசாமியும் தேர்வு மையத்தில் வைத்துதான் பார்த்தோம் என்று சொல்லியுள்ளேன் என்றால், சரிதான். தேர்வு மையத்திற்குள் எலக்ட்ரானிக் சம்பந்தமான செல்போனோ, பணமோ எடுத்துச் செல்லலாமா என்பது பற்றி எனக்குத் தெரியுமா என்றால், தெரியாது. நான் TNPSC குரூப் 2 தேர்வு எழுதி அதன் மூலம் பணியில் சேர்ந்துள்ளேன் என்றால், சரிதான். கருப்புசாமி அவர்கள்

வினாத்தாளை ஒப்பீடு செய்து பார்த்து வரும்படி என்னிடம் கொடுத்து நான் 15 நிமிடத்திற்குள் சரிபார்த்து வந்ததாக ஈரோடு, நீதித்துறை நடுவர் எண்.3 நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால், சரிதான். அதே சாட்சியத்தில் சா.பொ.2 தேர்வாணைய வினாத்தாள் 84 பக்கங்கள் கொண்டது என்று சாட்சியம் அளித்துள்ளேன் என்றால், சரிதான். ஈரோடு, நீதித்துறை நடுவர் எண்.3 நீதிமன்றத்தில் எனது சாட்சியத்தின்போது 84 பக்கங்கள் கொண்ட Comparison Statement என்பது யாரால் தயார் செய்யப்பட்டது என்றால், காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்று சாட்சியம் அளித்துள்ளேன் என்றால், சரிதான். அந்த Comparison Statement புகார் கொடுத்ததற்குப் பின்னிட்டு தயார் செய்யப்பட்டது என்று சொல்லியுள்ளேன். Comparison Statementக்கு அடுத்தபடியாக உள்ள 1 முதல் 59 பக்கங்கள் உள்ளவை எதிரி சுரேஷ்குமார் என்பவரிடமிருந்து கைப்பற்றியவையாகும் என்று சொல்லியுள்ளேன் என்றால், சரிதான். மேற்படி 59 பக்கங்களில் இடைச்செருகலாக எழுதப்பட்டவை யாரால் எழுதப்பட்டது என்றால், காவல் நிலையத்தில் எழுதப்பட்டது என்று சொல்லியுள்ளேன் என்றால், சரிதான். அவ்வாறு எழுதப்பட்ட இடைச்செருகல்கள் எப்போது எழுதப்பட்டது என்றால், நேரம் எனக்கு சரியாக நினைவில்லை, ஆனால் பகல் 1.45 மணியிலிருந்து நள்ளிரவு 1.30 மணி வரை வழக்கு சம்பந்தமாக காவல் ஆய்வாளருடன் இருந்தேன். தற்போது எனக்கு யார் எழுதினார்கள் என்று ஞாபகம் இல்லை. இடைச்செருகல்களாக அவ்வாறு எத்தனை இடங்களில் எழுதப்பட்ட என்றால், ஞாபகம் இல்லை. என்ன காரணத்திற்காக இடைச்செருகலாக எழுதப்பட்டது என்றால், TNPSC வினாத்தாள்களில் அது எத்தனையாவது வினாவாக உள்ளது என்பதற்காக எழுதப்பட்டிருக்கலாம். புலன் விசாரணையின்போது ஆவணங்களில் திருத்தம் செய்வதற்கு உடந்தையாக இருக்கக்கூடாது என்பது எனக்குத் தெரியும் என்றால், சரிதான். சுரேஷ்குமார் என்பவர் தேர்வு எழுதச்செல்லும்போது, எங்களிடம் பொருட்களை ஒப்படைக்கும்போது நாங்கள் யார் என்பதை அவரிடம் சொல்லவில்லை என்று நீதிமன்ற விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால், சரிதான். சுரேஷ்குமாரிடமிருந்து வினாவிடைத்தாள்களில் சரியான விடையின்மீது டிக் செய்திருப்பது யார் என்று எனக்குத் தெரியாது என்று சொல்லியிருக்கிறேன் என்றால்,சரிதான். அந்த வினாவிடைத்தாள்களில் பல கேள்விகளுக்கு பதில் எது எனக் குறிப்பிட்டு டிக் செய்யவில்லை என்றால் சரிதான் என்று

சொல்லியிருக்கிறேன் என்றால், சரிதான். சுரேஷ்குமார் கொடுத்த வினாவிடைத்தாளில் விடைகள் இன்னதுதான் என்று கண்டுபிடிக்க நாங்கள் எதுவும் முயற்சி மேற்கொண்டோமா என்றால் இல்லை என்று சொல்லியிருக்கிறேன் என்றால், சரிதான். தேர்வாணையத்தால் வழங்கப்பட்ட வினாத்தாளில் கணிதம் தொடர்பாக படங்கள் உள்ளதுபோல் சுரேஷ்குமார் கொடுத்த வினாவிடைத்தாள்களில் இருக்கின்றனவா என்றால் இல்லை என்று சொல்லியிருக்கிறேன் என்றால், சரிதான். 1 முதல் 59 பக்கங்களில் உள்ளவற்றை யாரால் கைப்பட எழுதியது என்று சுரேஷ்குமாரிடம் நானோ, கருப்புசாமியோ கேட்கவில்லை என்றால் சரிதான் என்று சாட்சியம் அளித்திருக்கிறேன் என்றால், சரிதான். சா.பொ.5 மற்றும் 6 ல் உள்ளவற்றை யார் எழுதியது என்று நாங்கள் கேட்கவில்லை என்று சொல்லியுள்ளேன் என்றால், சரிதான். கையால் எழுதி ஜெராக்ஸ் எடுக்கப்பட்ட வினாத்தாள்களை எந்த வகையான வினாத்தாளுடன் ஒப்பீடு செய்து பார்த்தேன் என்று போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால், சரிதான்.

(எதிரிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் பேரில் சாட்சியின் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.)